# தொடர்புக்கான தகவல்

“பில்டிங் பிளாக்ஸ்” பற்றி மேலும் அறிந்து கொள்ள விரும்பினால் தயவு செய்து “மொசைக்” நிறுவனத்திற்கு **604-254-9626** என்ற தொலை பேசி எண்ணில் ஒருங்கிணைப்பாளருடன் பேச வேண்டும் என்று சொல்லுங்கள். நீங்கள் உங்களை திட்டத்திற்குள் சேர்த்துக்கொள்ளவோ அல்லது வேறு ஒருவரை அதில் சேர்க்கவோ தொலைபேசியின் மூலம் தொடர்பு கொள்ளுங்கள்.

பரிந்துரைக்கும் படிவங்களைப்பெற கீழ்க்கண்ட இணைய தளத்தில் தொடர்பு கொள்ளுங்கள். **https://www.mosaicbc.org/services/family-children-youth/building-blocks-vancouver/**

இந்த திட்டம் பொருத்தமற்றது என்றால், நாங்கள் வேறு ஆதரவுகள் அல்லது உதவி பெற பரிந்துரைத்தல்கள் அளித்து உதவ முடியும்.

# நற்சான்றிதழ்

இந்தத் திட்டம் என் வாழ்வையே மாற்றியது. ஏனெனில் நான் என்னையே நம்ப ஆரம்பித்தேன். சூழ்நிலைகள் மற்றும் பிரச்சினைகளை எப்படிக் கையாளுவது என்று தெரிந்து கொண்டேன். எனது குடும்பத்தினர் தொலை தூரம் இருந்தும் அவர்கள் பெருமளவில் எனக்கு உதவினர். எல்லாவற்றிற்காகவும் நான் உங்களுக்கு நன்றி கூறுகிறேன். அவர்கள் அளித்த சேவைகள் எனக்கு இலவசமாகக் கிடைத்தன. நீங்கள் எதுவும் அதற்காகப் பணம் செலுத்த வேண்டியதில்லை. இந்த திட்டத்திற்கு நாணம் உண்மையிலேயே நன்றியுடைவராக இருக்கிறேன். மிக்க நன்றி - உங்கள் எல்லோரையும் ஆசீர்வதிக்கிறேன்.

**-- கிறிஸ்ட்டின், வான்கூவர் நகரின் “மொசைக்” நிறுவன “பில்டிங் பிளாக்ஸ்” வாடிக்கையாளர் மற்றும் எட்டு மாதக் குழந்தை மற்றும் நான்கு வயது பாலர் பள்ளி மாணவியின் தாய்.**

## “மொசைக்” நிறுவனம் பற்றி..

“மொசைக்” நிறுவனம் 1976 முதல் புதிதாக கனடாவிற்குக் குடியேறியவர்கள் நலனுக்காக இயங்கும் ஒரு இலாப நோக்கமற்ற மற்றும் பதிவு செய்யப்பட்ட அறக்கட்டளை ஆகும். இன்று, நாங்கள் கனேடிய குடிமக்கள், புதியதாக வந்தவர்கள், அகதிகள், புலம் பெயர்ந்தோர் மற்றும் தற்காலிக அயல் நாட்டுப் பணியாளர்கள் ஆகியோருக்கு மெட்ரோ வான்கூவர் நகரின் பல்வேறு இடங்களில் பூரணமான சேவைகளை அளிக்கிறோம்.

**இந்தத் திட்டத்துடன், “மொசைக்” நிறுவனம் கீழ்க்கண்ட திட்டங்களைச் செயல்படுத்துகிறது:**

குழந்தைகள் மற்றும் குடும்பத்த திட்டங்கள்
வேலைவாய்ப்புத் திட்டம் | ஆங்கில மொழி நிலையங்கள், மேல்விளக்கச் சேவைகள் | குடியிருப்புத் திட்டங்கள், பிரத்தியேக சேவைகள் | மொழிபெயர்ப்பு சேவைகள்.

**தொடர்புத் தகவல் பெற அல்லது மேலும் இச்சேவைகளைப் பற்றி அறிந்திட, www.mosaicbc.org என்ற இணைய தளத்தில் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள் அல்லது 604-254-9626 என்ற தொலை பேசி எண்ணில் அழையுங்கள்.**

@mosaicbc

MOSAIC

ASPIRE to Excellence® carf CANADA ACCREDITED

BRITISH COLUMBIA

குழந்தைகள் மற்றும் குடும்ப வளர்ச்சி அமைச்சகத்தால் நிதியுதவி பெற்றது.

Vancouver CoastalHealth


வான்கூவர் கடலோரப்பகுதி ஆரோக்கிய நிறுவனத்துடன் கூட்டு முயற்சி கொண்டுள்ளது.

©MOSAIC August 2017 [Tamil]

MOSAIC

# “பில்டிங் பிளாக்ஸ்” வான்கூவர்







**நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக புதிதாக வந்தவர்கள் கனேடிய சமூகத்தில் பூரணமாகப் பங்கு கொள்ளப் பயிற்சி அளிக்கும் நிறுவனம்.**

# “பில்டிங் பிளாக்ஸ்” என்பது என்ன?

வான்கூவர் நகரின் “மொசைக்” நிறுவன “பில்டிங் பிளாக்ஸ்” முதன் முதலாகப் பெற்றோர் ஆனவர்களுக்கு ஆரம்பத்தில் இருந்தே அவர்களது வீட்டிலேயே பெற்றோராக சிறந்து விளங்க உதவி செய்யும் நிறுவனம் ஆகும். அதன் மூலம் ஒரு ஆரோக்கியமான குழந்தைப்பருவ வளர்ச்சியை மேம்படுத்தவும், குடும்பம் நடத்துவதை சிறக்கச் செய்யவும் முடியும்.

இத்திட்டத்தில் உள்ள பெற்றோருக்கு ஒரு “மொசைக்” நிறுவன “வீட்டுக்கு வரும் சந்திப்பாளர்” உங்கள் வீட்டிற்கு வாரத்திற்கு சுமார் ஒருமுறை வந்து உங்களது கேள்விகளுக்கும் கவலைகளும் பதில் அளிப்பதுடன் பெற்றோராக செயல்படுவது எப்படி என்று ஆலோசனை வழங்கவும் செய்வார்.



# திட்டம் பற்றி.

.நீங்கள் முதன்முதலாகப் பெற்றோர் ஆகி உங்களது ஆதரவு அமைப்பில் இருந்து விலகி இருந்தாலோ தனிமைப்படுத்தப்பட்டதாகவோ அல்லது கவலைப்படுவதாகவோ உணர்ந்தால், உங்களுக்கு உதவி செய்ய நாங்கள் இருக்கிறோம். “மொசைக்” நிறுவன தாதியர்கள், சமூகப் பணியாளர்கள் மற்றும் திட்டப்பணியாளர்கள் உங்கள் சொந்த வீட்டிற்கே வந்து கீழ்க்கண்டவற்றைச் செய்வர்.

- உங்கள் குழந்தையின் ஆரோக்கியம் மற்றும் வளர்ச்சியைக் கண்காணித்தல்
- குழந்தைக்குத் தாய்ப்பால் ஊட்டுதல், புட்டிப்பால் புகட்டுதல், திட உணவளித்தல் பற்றி உங்கள் கேள்விகளுக்கு விடை அளித்தல்
- குழந்தைக்கு முறையாக மலங்கழிக்கப் பயிற்சி அளித்தல் பற்றி செய்தி அளித்தல்
- குழந்தையின் வளர்ச்சி நிலைகளைப்பற்றிய செய்தி அளித்தல்
- ஆரோக்கிய உணவுகள் பற்றி உரையாடுதல், உங்கள் குழந்தையுடன் எப்படிப்பேசுவது
- எப்படி விளையாடுவது என்று யோசனைகளை அளித்தல்
- குழந்தையின் பொருத்தமான ஒழுக்கக் கட்டுப்பாடு பற்றி பேசுதல்
- உங்கள் குழந்தையை பாலர் பள்ளிக்கு எப்படித் தயார் படுத்துவது என்பது பற்றிய செய்தியைப் பகிர்ந்து கொள்ளுதல்
- இத்தகைய வருகைபுரிதல்கள் குடுபத்தின் தேவைகள் மற்றும் சூழ்நிலைகளை பொறுத்து நிர்ணயிக்கப்படும்



# யார் இத்திட்டத்திற்குத் தகுதியானவர்கள்?

பில்டிங் பிளாக்ஸ் நிறுவனம் முதன் முறையாகப் பெற்றோர் ஆக உள்ளவர்களுடன் மட்டும் பணிபுரியும். வான்கூவர் நகரில் உள்ள பெற்றோர் தங்களது முதல் குழந்தையை எதிர்பார்ப்பவர்களாகவோ அல்லது ஆறு மாதத்திற்கும் கீழ் வயதுள்ள குழந்தைகள் உள்ளவர்களாகவோ இருப்பவர்களுக்கு நாங்கள் சேவைகள் புரிகிறோம்.

திட்ட சேவைகள் கர்ப்ப காலத்தின் மூன்றாம் பகுதியிலோ அல்லது குழந்தைக்கு ஆறு மாதத்திற்குள் வயது இருந்தாலோ ஆரம்பிக்கும். சேவைகள் வேண்டுமென்றால் குழந்தை பாலர் பள்ளியில் சேரும் வரை அளிக்கப்படும்.

பில்டிங் பிளாக்ஸ் வான்கூவர் நிறுவனம் ஒவ்வொரு மாதமும் சராசரியாக 120 வான்கூவர் நகரக் குடும்பங்களுக்கு துடிப்பாக சேவை புரிகிறது. அது ஒரு தனித்துவம் வாய்ந்த நீண்ட கால ஆதரவு அளிக்கும் சேவை ஆகும்.

எங்களது குழுவில் உள்ளோர்:

- குடும்ப ஆதரவு அளிக்க இல்லத்திற்கு வருகை புரிவோர்
- பொது நலத் தாதியர்
- சமூகப் பணி ஆலோசகர்கள்
- திட்ட ஒருங்கிணைப்பாளர்

## சேவை அளிக்கப்படும் மொழிகள்

நாங்கள் பில்டிங் பிளாக்ஸ் ஆதரவை காண்டனீஸ், ஆங்கிலம், இந்தி, தகளாக், வியட்நாமீஸ், உருது, கொரிய, ஸ்பானிஷ், பஞ்சாபி, தமிழ், மற்றும் மாண்டரின் மொழிகளில் அளிக்கிறோம்.

மேலதிக விவரங்களுக்கு, தயவு செய்து 604.254.9626 என்ற தொலைபேசி எண்ணில் அழைத்து ஒருங்கிணைப்பாளருடன் உரையாடக் கேளுங்கள்.